BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# பிராம்ப்டன் நகரத்தின் சமுதாயத்தினை தூய்மையாக, பாதுகாப்பாக மற்றும் பசுமையாக வைப்பதில் உதவுவதற்காக மாசு முன்தடுப்பு வாரத்தினை பிராம்ப்டன் நகர நிர்வாகம் அனுசரிக்கிறது

பிராம்ப்டன், ON (செப்டம்பர் 18, 2023) – செப்டம்பர் 18 முதல் 22 ஆம் தேதி வரை மாசு முன் தடுப்பு வாரமாக அனுசரிக்கிறது; மேலும் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றி குடியிருப்புவாசிகள், நகருக்கு வருகை புரிபவர்கள் மற்றும் தொழில் புரிபவர்களுக்கு நினைவூட்டுகிறது.

மாசு முன் தடுப்பு வாரம் என்பது ஒரு வருடாந்திர பிரச்சாரமாகும்; இது சுற்றுச்சூழலில் புகவிருக்கின்ற மாசுப்பொருட்களைக் குறைப்பதற்கும் முன்கூட்டியே தடுப்பதற்கும் ஒவ்வொருநாளும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இந்த ஆண்டு, பிராம்ப்டன் நகர நிர்வாகமானது மாசுபாட்டைத் தடுப்பதன் முக்கியத்துவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும்; இதில் பிராம்ப்டன் நகரவாசிகள் குப்பைகளைக் குறைப்பதின் மீது கவனம் கொள்ளச் செய்யும் மற்றும் பிராம்ப்டனின் திடீர் வெள்ளநீர் வடிகால் அமைப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும். திடீர்வெள்ள நீர் என்பது மழையினாலும் மற்றும் பனி உருகுவதாலும் ஏற்படுவதாகும். இது தெருக்களில் சாலைகளில் இருந்து துவங்கி நகரின் மழைநீர் வடிகால் அமைப்பிலும் இறுதியில் சுற்றுச்சூழலிலும் பாய்கிறது. செல்லப்பிராணி கழிவுகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், சாலை உப்பு, மோட்டார் எண்ணெய் மற்றும் வாகன திரவங்கள் மற்றும் குப்பைகள் போன்றவை படிந்த நிலத்தின் மீது ஓடுவதால் திடீர் வெள்ள நீர் மாசுபாட்டையும் திரட்டிச் செல்கிறது. குப்பைகளைக் குறைப்பது மற்றும் அபாயகரமான பொருட்களைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துவது ஆகிய செயல்கள், மழைவெள்ளநீர் வடிகால் அமைப்பில் மாசுப்பொருட்கள் நுழைவதைத் தடுக்க உதவுகிறது.

**உயர் தரமான ஐந்து மாசுக் கட்டுப்பாட்டு செயல்கள்:**

1. உங்கள் சொத்தை சுத்தமாகவும் குப்பைகள் இல்லாததாகவும் வைத்திருங்கள் அல்லது உள்ளூர் பூங்காக்கள் தூய்மைப்படுத்தும் நிகழ்வில் சேருங்கள் அல்லது நடத்துங்கள்.
2. உங்கள் செல்லப்பிராணியைப் பின்தொடர்ந்து செல்லப்பிராணி கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துங்கள்.

3. சாலையில் உப்பு உபயோகம் செய்வதில் கவனமாக இருங்கள். உப்பு உபயோகிக்கும் முன்பாக, பொழிந்த பனித்துகளை அகற்றி கட்டிப்பனியை உடைத்து, பனியை அகற்றவும்.
4. உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள்/களைக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைக்கவும் அல்லது அகற்றவும்.
5. மோட்டார் எண்ணெய், உறைதல் தடுப்பிக்கள் மற்றும் வண்ணப்பூச்சுகள் போன்ற வீட்டு அபாயகரமான பொருட்களை பீல்ஸ் பிராந்திய சமூக மறுசுழற்சி மையங்களின் கிளைகளில் இட்டு அப்புறப்படுத்துங்கள்.

**இந்தத் தேதியை ஒதுக்கிக் கொள்ளுங்கள்**

கேட்ச்பேசின் ஆர்ட் ப்ராஜெக்ட் (Catchbasin Art Project ) அமைப்பு மூலம் உள்ளூர் கலைஞர்களால் வரையப்பட்ட சுவரோவியங்கள் வெளியிடுதல் மற்றும் விளையாட்டுகள், பரிசுகள் ஆகியவற்றுடன் பிராம்ப்டன் உழவர் சந்தையில் நடக்கவுள்ள  மாசு முன்தடுப்பு வார நிகழ்வுக்கு, குடியிருப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

சனிக்கிழமை, செப்டம்பர் 23, 2023, காலை 8 முதல் மதியம்1 வரை, கேஜ் பார் (Gage Park)இல்.

கேட்ச்பேசின் ஆர்ட் ப்ராஜெக்ட் (Catchbasin Art Project ) பற்றி மேலும் அறிய, வருகை தாருங்கள், City of Brampton | Stormwater | From Streets to Streams - Catchbasin Art Project.

**லின்குகள்**

உள்ளூர்ப் பூங்காக்கள் தூய்மைப்பணி நிகழ்ச்சிகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தாருங்கள், City of Brampton | Parks and Open Spaces | Parks Cleanup.

கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தல் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தாருங்கள், Community Recycling Centres - Region of Peel (peelregion.ca)

திடீர்வெள்ளநீரை குடியிருப்புவாசிகளும் தொழில் புரிவோரும் முன்கூட்டி தடுப்பதை எப்படி செய்யலாம் என மேலும் அறிய வருகை தாருங்கள் City of Brampton | Stormwater | Pollution Prevention at Home.

**அறிஞர் கூற்றுக்கள்**

“"பிராம்ப்டன் நகரமானது ஒரு ஆரோக்கியமான, நெகிழ்வு தன்மை கொண்ட மற்றும் நீடித்து நிலைக்கவல்ல நகரத்தை உருவாக்குவதில், நமது இயற்கையான மற்றும் கட்டமைக்கப்பட்ட சூழல்களைப் பாதுகாத்து, மேம்படுத்தி, சமநிலைப்படுத்தும் ஒரு சமூகத்தினர் அடங்கிய நகரமாகும். நமது சுற்றுச்சூழலை பராமரிப்பதில் நம் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு, மாசு தடுப்பு என்பது நமது பூமி கிரகத்திற்கு நாம் ஆற்ற வேண்டிய பொறுப்பாகும். இந்த மாசு தடுப்பு வாரத்தில், குடியிருப்பாளர்கள், வணிகங்கள் மற்றும் பார்வையாளர்கள் ஆகிய நாம் அனைவருமே பிராம்ப்டனுக்கு மிகவும் தூய்மையான மற்றும் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க நாம் செய்து வரும் பணியை நாமே கொண்டாடலாம்.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்*

“இன்று மாசுபடுவதைத் தடுப்பதானது, தூய்மையான மற்றும் பிரகாசமான நாளைய எதிர்காலத்தை உறுதி செய்கிறது. நமது பூமி கிரகத்தைப் பாதுகாக்க நிலம், நீர் மற்றும் காற்றைப் பாதுகாப்பதற்கான எளிய தெரிவுகள் மற்றும் தைரியமான செயல்களைக் கொண்டே தொடங்குகிறது. மாசு முன்தடுப்பு வாரத்தின் போது, தூய்மையான, ஆரோக்கியமான பிராம்ப்டனை உருவாக்குவதற்கான ஒரு பகுதியாக மாசடைவதை எவ்வாறு தடுப்பது என்பது பற்றி மேலும் அறிய அனைவரையும் ஊக்குவிக்கிறேன்.”

- *மைக்கேல் பல்லேய்ஸ்சி, பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 2 மற்றும் 6; தலைவர், திட்டமிடல் மற்றும் வளர்ச்சித் துறை, பிராம்ப்டன் நகரம்*

“இன்றைய பொறுப்பான செயல்களால் மட்டுமே நீடித்து நிலைக்க வல்ல நாளைய எதிர்காலம் தொடங்குகிறது என்பதை பிராம்ப்டன் நகரம் அங்கீகரிக்கிறது. குடியிருப்பாளர்கள், வணிகங்கள் மற்றும் பணியாளர்களுடன் சேர்ந்து, பிராம்ப்டனின் சுற்றுச்சூழல் நல்வாழ்வை நிலைநிறுத்த நாமே கடமைப்பட்டுள்ளோம். நகரத்தின் பசுமை வளர்ப்போம் திட்டம் என்பது ஒரு நீடித்து நிலைக்க வல்ல எதிர்காலத்திற்கான ஒரு திட்டவரைபடமாகும்; மேலும் மாசு தடுப்பு வாரத்தின் போது, பிராம்ப்டனின் இயற்கை சூழலைப் பாதுகாப்பதற்கான நமது உறுதிப்பாட்டை நாம் புதுப்பிக்கிறோம்.”

- *மார்லன் கால்லிடீன், தலமை நிர்வாக அதிகாரி, பிராம்ப்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 90,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

MEDIA CONTACT
**ஊடக தொடர்புகள்**
multiculturalmedia@brampton.ca